# பத்திரிக்கைச் செய்தி

எண் 718 நாள் 31-08-08

இந்தியாவிலேயே முதன்முதலாக 1855 ஆம் ஆண்டு சென்னை மாநகரில், சிறு நிலப்பரப்பில் தொடங்கப்பட்ட உயிரியல் பூங்காவிலிருந்த விலங்குகள் , நகர வளர்ச்சியால் புகை மற்றும் ஒலிச் சீர்கேடுகளால் சுற்றுப்புறச் சூழ்நிலை சரியில்லாத காரணத்தினால் இயற்கை எழிலுடன் காணப்படும் வண்டலூரில் 602 ஹெக்டேர் நிலப்பரப்பில் 1985 ஆம் ஆண்டு உயிரியல் பூங்கா பார்வையாளர்களுக்கு திறந்து வைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இப்பூங்கா தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய பூங்காவாகத் திகழ்ந்துவருகிறது.

உயிரியல் பூங்காவின் முக்கிய நோக்கங்களாவன

1. அழிந்து வரும் வன உயிரினங்களை இனவிருத்தி செய்து அவற்றின் பாரம்பரியத் தன்மை சீரழியாமல் பாதுகாத்தல்,
2. உயிரினங்கள் பாதுகாத்தலின் அவசியத்தை கல்வி அறிவு புகட்டுதலின் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
3. அழிந்து வரும் உயிரினங்களை இனவிருத்தி செய்து அவற்றின் எண்ணிக்கையை பெருக்கி தேவை ஏற்படின் மீண்டும் அவற்றினுடைய இயற்கை வாழிடங்களிலேயே வாழ விடுதல்.

அழிநிலையில் உள்ள விலங்குகளில் சிங்க வால் குரங்கு, நீலகிரி கருங்குரங்கு, வெளிமான், செந்நாய் மற்றும் மணிப்பூர் மான் ஆகியவை இங்கு நல்ல முறையில்

இனவிருத்தி செய்து அவற்றின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளன. அதன் காரணமாக இப்பூங்காவை மத்திய உயிரியல் பூங்காக்கள் ஆணையம் சிறந்த இனவிருத்தி மையமாகப் பாராட்டியுள்ளது.

இப்பூங்காவில் 49 இன பாலூட்டிகளான சிங்கம், புலி, கரடி, யானை, மான்கள் மற்றும் குரங்குகள் போன்ற 431 உயிரினங்களும், 60 இனப் பறவைகளான மயில், குயில், கிளிகள் மற்றும் நாரைகள் போன்ற 728 பறவைகளும், 30 இன ஊர்வனங்களான ராஜநாகம், நல்லபாம்பு, ஆமைகள் மற்றும் முதலைகள் போன்ற 292 ஊர்வனங்களும், மொத்தம் 139 இனங்களைச் சேர்ந்த 1451 உயிரினங்கள் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## <u>மான்கள் உலாவிடம்</u>

இன்று 31.08.08 மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள மான்கள் உலாவிடமானது 30 ஹெக்டேர் பரப்பளவில் இயற்கைச் சூழலுடன் மலைப்பாங்கான இடத்தில் அமைந்துள்ள மான்கள் உலாவிடத்தில் 50 கடமான்களும், 10 புள்ளி மான்களும் பார்வைக்கு விடப்பட்டுள்ளன. மான்கள் உலாவிடத்தில் மான்களுக்குத் தேவையான குடிநீர் மற்றும் தாவர, உணவு வகைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மான்கள் இயற்கையான சூழலில் சுதந்திரமாக உலாவுவதை பார்வையாளர்கள் சிங்க உலவிடத்தை கண்ட பின் அதே மின்கல ஊர்திகளில் இம் மான்களையும் கண்டுகளிக்கலாம்.

மான்கள் உலாவிடப் பகுதியில் மான்களில் கடமான் சுமார் 5 அடி உயரத்திற்கும் 250லிருந்து 300 கிலோ எடையும் கொண்டிருக்கும். இம்மான்கள் உயிரியல் பூங்காக்களில் 18 ஆண்டுகள் வரை உயிர் வாழும். புள்ளி மான்கள் 3 அடி உயரம் வரை வளரும், 15 ஆண்டுகள் உ யிர் வாழும்.

## யானை சவாரி

பார்வையாளர்களின் நீண்ட காலக் கோரிக்கையான யானைச் சவாரி பொள்ளாச்சியிலிருந்து கொண்டு வரப்பட்ட இரண்டு யானைகளைக் கொண்டு இன்று 31.08.08 மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. யானைகளில் ஆப்பிரிக்க, ஆசிய யானைகள் என இரு வகை உண்டு. தரையில் வாழக்கூடிய விலங்குகளிலேயே இதுதான் மிகப் பெரியது. ஆசிய யானை சுமார் 5000 கிலோ எடையுடன் 70லிருந்து 80ஆண்டுகள் வரை உயிர் வாழக் கூடியது. ஆசிய யானை மிகவும் புத்திக் கூர்மையுடன் மனிதனின் மொழியைப் புரிந்து கொண்டு செயல்படக் கூடியது. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் தொடங்கப்பட்டுள்ள யானை சவாரியில் யானை ஒன்றில் ஒரே சமயத்தில் நான்கு பேர் பயணிக்க முடியும். இச் சவாரி காலை 9.30 – 11.30 வரையிலும் மாலை 4.00 – 5.30 வரையிலும் இயங்கும்.

## மின்கல ஊர்திகள்

பெருகி வரும் பார்வையாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய சுற்றுச்சூழல் மாசு படாத வகையில் மின்கலத்தால் இயங்கக் கூடிய ஐந்து மின்கல ஊர்திகள் 25 இலட்சம் ரூபாய்க்கு பூங்கா நிர்வாகம் பெற்று மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களால் இன்று 31.08.08 தொடங்கி வைக்கப்பட்டது. இம் மின்கல ஊர்தியில் ஒரே சமயத்தில் 12 பார்வையாளர்கள் வரை உயிரியல் பூங்காவில் உள்ள உயிரினங்களை கண்டுகளிக்க இயலும்.



வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9